ஊடக அறிவிப்பு

2008-07-24

Visit our web site

www.tisrilanka.org



TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

Building a Nation of integrity

28/1, Bullers Lane, Colombo 07

Tel/Fax: 0112-501474, 0112-592287

Email: tisl@sltnet.lk

Web: http://www.tisrilanka.org


# COPE மற்றும் PAC தலைமைத்துவப் பதவிகளை ராஜினாமாச் செய்யுமாறு TISL வலியுறுத்துகிறது.

COPE (அரசாங்க தொழில்கள் குழு) மற்றும் PAC (பொதுக் கணக்குகள் குழு)ஆகியவற்றிற்குத் தலைமை வகிக்க அமைச்சர்களைத் தெரிவு செய்யப் பாராளுமன்றம் எடுக்கும் நடவடிக்கையை, நிறைவேற்று அதிகாரிகளின் ஒழுங்கீனமான நிதிச்செலவு தடையில்லாமல் தொடர்வதற்கு ஏதுவாக சட்டபூர்வ நுண்ணாய்வைப் பலவீனப்படுத்தும் திட்டமிட்ட ஜனநாயக விரோத நடவடிக்கையாகும் என்று ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் விபரித்துள்ளது.

இரு மேல்விசாரணைக் குழுக்களான COPE மற்றும் PAC க்குத் தலைமை தாங்க அமைச்சர்களை நியமித்தமை குறித்த TISL வருத்தம் தெரிவிக்கையில், இந்த நடவடிக்கை ஜனநாயக பராளுமன்ற பராம்பரியங்களின் சகல நடைமுறைகளுக்கும் விரோதமானது என்று கூறுகின்றது. TISL 2008 ஜீலை மாதத்தில் சீரான நிதி மேல்விசாரணையை மேற்கொள்வதற்கான ஆரோக்கிய சூழலை உறுதிப்படுத்துவதற்கு, இந்தக் குழுக்களுக்கு அமைச்சர்களை நியமிக்க வேண்டாம் என்று அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுள்ளமை பற்றி நினைவூட்டுகின்றது.

> Related: Press Release on failure to appoint Financial Oversight Committees in Parliament
> http://tisrilanka.org/Press_Releases/pdf/PR_English.pdf

இந்தக்குழுக்களுக்கு தலைமை தாங்க இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள், அந்தப் பதவிகளிலிருந்து ராஜீனாமாச் செய்து, நேர்மைத்திறனும், ஜனநாயக விழுமியங்களுக்குமான தமது கடப்பாட்டைப் புலப்படுத்த வேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோமென TISL நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.சி.வெலியமுன விடுத்த அறிக்கை மூலம் TISL தெரிவித்துள்ளது.

“கேள்விக்குரிய இந்தத் தீர்மானத்தை பராளுமன்றம் மறுபரிசீலனை செய்து பராளுமன்ற மேல்விசாரணைக் குழுக்களுக்குத் தலைமை வகிக்க, எதிர்க் கட்சி அங்கத்தவர்களை நியமிக்கும் அடிப்படை விழுமியத்தைப் பேண வேண்டும் என்று நாம் மீண்டும் வலியுறுத்துகின்றோம்”என்று அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

பராளுமன்ற பராம்பரியப்படி மேல்விசாரணைக் குழுக்கள் சாதாரணமாக எதிர்க்கட்சி அங்கத்தவர்களின் தலைமையில், அரசாங்க உறுப்பினர்கள், அங்கத்தவர்களாக செயற்படுவதாக உள்ளன. இலங்கையிலும் இந்தப் பாரம்பரியம் பல ஆண்டுகளாகப் பேணப்பட்டு வந்துள்ளது.